# 3 மெட்ரோ ரயில் நிலையங்களில் கூடுதல் சுரங்கப் பாதைகள் திறப்பு

சென்னை, அக்.21-

சென்னையில் உள்ள மூன்று மெட்ரோ ரயில் நிலையங்களில் கூடுதல் சுரங்கப் பாதைகள் திறக்கப்பட்டன.

சென்னை விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து சென்ட்ரல் வரையிலும், விமான நிலையத்தில் இருந்து தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வரையிலும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்தப் பாதையில் திருமங்கலத்தில் இருந்து சென்ட்ரல் வரை சுரங்கப் பாதையில் ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் கோயம்பேடு - நேரு பூங்கா மற்றும் நேரு பூங்கா-சென்ட்ரல் இடையே மெட்ரோ ரயில் போக்குவரத்து நீட்டிக்கப்பட்டது. இந்த நிலையங்களில் பயணிகள் வந்து செல்ல ஏதுவாக, ஒவ்வொரு நிலையத்திலும் 4 சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு வந்தன. இதில், ஒவ்வொரு நிலையத்திலும் இரண்டு சுரங்கப் பாதை பணிகள் நிறைவடைந்த நிலையில்,. ரயில் போக்குவரத்து தொடங்கப்பட்டது.

இந்த ரயில் நிலையங்களில் மீதமுள்ள இரு சுரங்கப் பாதைகளின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நிலையில், அண்ணாநகர் கோபுரம், அண்ணாநகர் கிழக்கு மற்றும் பச்சையப்பன் கல்லூரி மெட்ரோ ரயில் நிலையங்களில் சுரங்கப் பாதை அமைக்கும் பணி முடிந்ததால், பயணிகள் பயன்பாட்டுக்காக வியாழக்கிழமை திறந்துவிடப்பட்டன. இங்கு மின்தூக்கி, நகரும் படிக்கட்டு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.